# IN THE SPECIAL COURT OF FOREST OFFENCE CASES JUDGE,

## KANNIYAKUMARI DISTRICT AT NAGERCOIL

## C.C. No. 4/2025

## Deposition of P.W. 3

**Name** : **Thiru. Sivakumar**

**Father's Name** :

**Village** :

**Taluk** :

**Caste** :

**Calling** :

**Religion** :

**Age** :

**Dated** : **13.08.2025**

Solemnly affirmed by Assistant Tmt. Sheeba]

**சாட்சி இன்று நீதிமன்றத்தில் ஆஜராகி சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை :**

நான் தற்போது தமிழ்நாடு தேயிலைத்தோட்டக்கழகம், நீலகிரி மாவட்ட நெல்லியாளம் கோட்டத்தில் கோட்ட மேலாளராக பணியாற்றி வருகிறேன். வழக்கு சம்பவத்தின்போது கன்னியாகுமரிமாவட்ட உதவி வன பாதுகாவலர் மற்றும் உதவி இயக்குநராக பணியாற்றி வந்தேன். ஆஜர் எதிரிகளை தெரியும். கடந்த 29.12.2022 அன்று மாவட்ட வன அலுவலருக்கு சுமார் 4.30 மணியளவில் கிடைத்த ரகசிய

தகவலின்படி உடனடியாக எனக்கு மாவட்ட வன அலுவலர் அவர்கள் கொடுத்த அறிவுரையின்படி ரோஸ்மியாபுரம் அருகே சிவகாமிபுரம் உப்பு ஓடை குட்டிக்குளம் அருகில் உடும்பு வேட்டையாடுவதாக கிடைத்த தகவலின்படி என்னுடைய தலைமையில் பணகுடி வனவர் திரு. மணிகண்டன், சிவகாமிபுரம் வனக்காப்பாளர் திரு. சங்கரபாண்டியன் மற்றும் வேட்டைத்தடுப்பு காவலர்கள் திரு. சிராஜ், திரு. ஜெகன், திரு. சரவணன் மற்றும் வனச்சரக அலுவலர் திரு. ரவீந்திரன் ஆகியோர் குழுவாக சென்று உப்பு ஓடை குட்டிக்குளம் அருகே மூவர் நின்றுகொண்டிருந்ததைப்பார்த்தோம். எங்களை பார்த்தவுடன் ஒருவர்தப்பி ஓடிவிட்டார். மற்ற இரு நபர்களை பிடித்து விசாரணை செய்தபோது விசாரணையில் அவர்கள் ஆதிகேசவன் மற்றும் சுனில் என்று கூறினர். அவர்களிடம் விசாரணை செய்தபோது தப்பி ஓடிய நபரின் பெயர் இசைக்குமார் என தெரிவித்தார்கள். மேற்படி இருவரிடமிருந்து சுமார் 1.5 கிலோ உரித்த தோலுடன் கூடிய உடும்பு இறைச்சி, தோலுடன் உடும்பு துண்டுகள், ஸ்டீல் கைக்கரண்டி, அலுமினிய சட்டி, கத்தி ஆகியவைகளை கைப்பற்றி சம்பவ இடத்தில் ஸ்தல மகசர், எச்.நமூனா, ஒப்புதல் வாக்குமூலம் ஆகியவை தயார் செய்யப்பட்டது. நான் ஸ்தல மகசரில் கையொப்பம் செய்துள்ளேன். ஸ்தல மகசர் ஏற்கெனவே அ.சா.ஆ. 2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.